உ

சிவமயம்



யாழ் தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், இத்தாலி

Somma Campagnaஐ வதிவிடமாகவும் கொண்ட,

எங்கள் குலவிளக்கு

# அமரர் திருமதி அருந்தவமலர் நேசகுமாரன்

அவர்களின் ஞாபகார்த்த

# நினைவு மலர்

22.09.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி
உருகி ஒளியூட்டி, ஆல மரமாகஎம் குடும்பத்திற்கு
நிழல் பரப்பி எம்மையெல்லாம் அன்போடும்
பண்போடும் பாசத்தோடும் வளர்த்து
நல்வழிகாட்டி, நற்கல்வியூட்டி,
உறுதுணையாக இருந்து
சொந்தபந்தங்கள் அனைவருக்கும்
பக்கபலமாய் இருந்துசீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய், குடும்பத்தின் தலைவியாய்,
தாயாய்மனம் பலமாண்புடன் பரப்பி
இனமெல்லாம் இன்புடன் வாழ ஏற்ற நற்பணிகள்
காத்துவையத்துள் என்றும்
நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினியமலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி
என்றும் நீங்காநினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் திருமதி அருந்தவமலர் நேசகுமாரன்
## அவர்கள்

அன்னை மடியில்
25 * 11 * 1959



ஈசன் அடியில்
23 * 08 * 2018

## திதி வெண்பா

ஆண்டு விளம்பி அமைந்த ஆவணியில்
பூண்ட பூர்வபக்க துவாதசியில் - மாண்பு
நேசகுமார் பத்தினியார் அருந்தவமலர் அம்மை
ஈசனடி சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேலென லாமே

## கோளறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகள் ஓர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் கார்அகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெரும் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதயாய விடங்களில் பலவல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்றிரு வாலவாயர னிற்கவே

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
யேற்றாயடிக் கேயிர வும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டான் துறையம்மானே

பொன்னார் மேனியனே புலித்தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காகத்
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா – விளம்பே

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தருள
சீதவள யவற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லை சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி அருந்தவமலர் நேசகுமாரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் இணையில்லாச் சிகரமென திகழும் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் வீற்றிருக்கும் தாவடிப்பதியில் சிவத்தமிழ் பரம்பரையை சேர்ந்தவர்களான காலஞ்சென்ற அமரர் பரராஜசிங்கம் அவர் மனைவி அன்னலட்சுமிக்கும் அவர்கள் குடும்பத்தில் மூன்றாவது மகளாக பிறந்தவர் அமரர் அருந்தவமலர் நேசகுமாரன் அவர்கள் கார்த்திகை திங்கள் 25ம் நாள் 1959இல் பிறந்தார். தனது இளமைக் காலத்தை அமைதியாகக் கழித்தார்.

அன்பும் அடக்கமும் கொண்ட இவர் படிப்பில் மிகவும் நாட்டம் உடையவர். குழந்தை பிராயத்திலேயே பண்பும் பணிவும் உள்ள பிள்ளையாக இருந்தார். அவரது பெயருக்கேற்ப எல்லோரிடத்திலும் இவரது அன்பான அமைதியான பேச்சும் அவரை பண்புள்ள மனிதனாகக் காட்டியது.

அன்னார் திரு.ஸ்ரீஸ்கந்தவராயா திரு நவரத்தினராஜா ஆகியோரை பாசமிகு அண்ணாமார்களாகவும் மற்றும் திருமதி பவளமலர் சோமசுந்தரம் அவர்களின் பாசமிகு தங்கையாகவும் மற்றும் அமரர் யோகராஜா அமரர் மனோகரராஜா மற்றும் திரு. சௌந்தரராஜா ஆகியோரை பாசமிகு தம்பிகளாகவும் பெற்றே அன்பும் மரியாதையும் பண்பாடும் கலாச்சார ஈடுபாடுகளும் ஒருங்கே அமையப் பெற்றவராக தம் குலப் பண்பை மாண்புறச் செய்து இனிதே வாழ்ந்து வந்தார்.

இவர் அதே ஊரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அமரர் இரத்தினம் அவர் மனைவியான அமரர் இரத்தின பூபதி ஆகியோரின் தவப்புதல்வாரன அமரர் நேசகுமாரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கைப்பிடித்து தனது இல்லற வாழ்க்கையை தொடங்கினார். அவர்களின் இல்லற வாழ்க்கையின் பயனாக மூன்று முத்துக்களான ரக்சாஜினி, சுஜிந்திரன், ஜனனி ஆகிய குழந்தை செல்வங்களைப் பெற்று இனிதே வாழ்ந்து கொண்டிருந்தார். தனது கணவர் பிள்ளைகளிடம் அளவு கடந்த பாசத்துடன் இருந்தார். அவரது கணவர் குடும்ப முன்னேற்றத்திற்காக தனது மனைவி பிள்ளைகளை விட்டு வெளிநாடு வந்தவர் இத்தாலியில் தங்கி 15 ஆண்டுகள் கழித்தார். தனது கடின உழைப்பால் குடும்பத்தை நல்ல நிலைமைக்கு ஆளாக்கினார்.

தனது கணவர் வெளிநாட்டில் இருந்து உழைத்தார். உள்நாட்டுப் பிரச்சனையால் தனது பிள்ளைகளை படிக்க வைத்து கண்ணை இமை காப்பது போல் பாதுகாத்தார். தாவடியில் பிள்ளையார் கோவில், அம்மன் கோவில், முருகன் கோவில் அருகில் பூமனை அமைத்து வாழ்ந்து வந்தார்.

இவர் தனது நாட்டின் நிலமை சரியில்லாத காரணத்தால் தனது கணவரின் அழைப்பின் பேரில் 1999இல் இத்தாலி வந்தார். தாய் என்ற சொல்லுக்கு ஏற்ப தனது கடமையைச் சரிவரவே செய்து வந்தார்.

பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் தனது மூத்த மகளான லக்சாஜினிக்கு இணுவிலைச் சேர்ந்த அமரர் திரு இராசையா அவரது மனைவி திருமதி புஸ்பமணியின் அன்பு மகன் லண்டனில் வசிக்கும் சுரேஸ்குமாரைத் திருமணம் செய்து வைத்து அழகான பேரப்பிள்ளைகளான அபிஜன், அபிராமி, நேஹா என்னும் அழகான மூன்று மழலைகளுக்கு அம்மம்மா ஆனார்.

தனது மகன் சஜிந்திரன் தனது சொந்த காலில் நிற்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தார். இத்தாலியில் தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனுக்காகச் சொந்தமாக புதிதாக தனது ஆசைப்படி வீடு கட்டினார். சந்தோசமான வாழ்க்கையில் ஒரு நாள் திடீரென மாரடைப்பால் அன்னாரின் கணவர் 20.10.2009இல் காலமானார். இந்த இழப்பை தாங்க முடியாமல் தடுமாறி நின்ற பொழுதில் அம்மாவின் அன்பும் அரவணைப்பும் மனவுறுதியும் எங்களை அந்த துயரத்தில் இருந்து காப்பாற்றி மீண்டும் வாழத் தூண்டியது.
தனது இளைய மகளான ஜனனிக்கு கொழும்பில் வசிக்கும் திரு.திருமதி காசி நவரட்ணம் யோகேஸ்வரி தம்பதிகளின் தவப்புதல்வன் இத்தாலியில் வசிக்கும் காசிரூபன் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தார்.

எங்கள் தாயார் அருந்தவ மலர் தனது மணஉறுதியும் பொறுமையும் எல்லோரையும் அரவணைத்து உபசரிக்கும் நற்குணங்களையும் என்றும் மறந்தது இல்லை.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சுற்றத்தார் எல்லாம் சூழ்ந்து நிற்க 2018 ஆவணி 23ம் திகதி வியாழக்கிழமை அதிகாலையில் எம்தாயார் இறைவனடி சேர்ந்தார். எங்கள் அன்புத் தாயின் இழப்பு எமது குடும்பத்திற்கு எவராலும் திருப்ப முடியாத ஒரு இடைவெளியாகவே இருக்கும்.

எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பணிவோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்புள்ள,
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அருமைத் தாயார்

எங்கள் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு எனது அருமைத்தாயார் இறைவனடி சேர்ந்து விட்டார். விநாயகப் பெருமானிடம் மிகவும் பக்தி கொண்டார். அவரின் ஒரே மகனாகப் பிறந்து நான் அவருடைய கண்ணியமும், கட்டுப்பாடும், தெய்வபக்தியும் நிறைந்த நாளாந்த வாழ்க்கையை நினைவு கூர்ந்து தலை வணங்குகிறேன்.

எனது சிறுவயதில் முதல், அவருடைய தள்ளாத காலம் வரை எங்கள் மத்தியில் ஒரு ஆணிவேராக நின்று, அன்புடனும் பாசத்துடனும் எங்கள் குடும்பத்தை பராமரித்த பண்பையும் பலத்தையும் நினைத்து பெருமைப்படுகின்றேன்.

சின்னஞ் சிறு வயது முதல் விவரிக்க முடியாத ஏற்றத் தாழ்வுகளையும் மௌனமாக இன்முகத்துடன் தாங்கியது மட்டுமன்றி, தன்னலம் கருதாது, தன்னை நம்பி தாங்கி நின்ற பெரியோர்கள், பெற்றோர்கள், சுற்றத்தார் அனைவரையும் அணைத்துக் கைகொடுத்துச் சிறப்பித்த கருணையை என் நினைவில் என்றும் நிறுத்துவேன்.

ஒரு குடும்பத்தை நல்வழியில் வளர்ப்பது இலகுவல்ல, எவ்வளவோ சவால்கள், எதிர்பார்ப்புக்கள், ஏற்றத்தாழ்வுகள் எல்லாவற்றையும் எதிர் நோக்கி நின்று எல்லோருக்கும் அன்பு பெருக அனுசரித்து நின்று அணைத்த பெருங்குணத்தை எப்போதும் போற்றுவேன்.

எனது அன்புத்தாயாரின் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்பு மகன்
**சஜிந்திரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு அன்னையே!
## மறக்க முடியுமா உங்களை?

உலகில் எங்களின் முதலுறவாய்
உயரிய பண்பின் இருப்பிடமாய்
குடும்பக் கூட்டின் தலைவியாய்
வெள்ளை உள்ளம் கொண்டவராய்
குவலயம் வாழ்ந்தாய் எம்தாயே
ஆனந்தம் கண்டவீடு அழகிழந்து போனது

இல்லறம் நல்லறமாக இனிய வாழ்க்கைத்
துணைவியாக, அன்புத் தாயாக, அருமை
மாமியாக, அன்புப் பாட்டியாக மொத்தத்தில்
ஒரு நிறைகுடமாக சிறந்த வாழ்க்கை
வாழ்ந்த அன்னையே நீங்கள் இளம்
தலைமுறைக்கு ஓர் ஒளி விளக்கு.

அம்மம்மா என அழைத்திட முடியாத அன்புப்
பேரப்பிள்ளைகளாக
அம்மா என்று அழைத்திட முடியாத அன்புப் பிள்ளைகள்
பெற்ற பிள்ளை போல் கருதி உற்ற
ஒரு தாயாய் உடனிருந்த மாமி
என அழைத்திட முடியாத மருமகன்கள்
நாம் மகிழ்ந்திருந்த அன்புருவம்
எங்களுடன் இன்று இல்லையென
ஏங்குவதே எம் நெஞ்சம்

உங்களை எங்களது தாயாக, மாமியாக
அம்மம்மாவாக தந்தமைக்கு இறைவனுக்கு கோடி நன்றி,
நினைவில் மீண்டும் இணைவோம் தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பிள்ளைகள்**
**மருமகன்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**Dear Our Ammammah,**

You didn't exist in this world
any more but you will always
be in our memory.

You will always be in our heart.
We sure that from the heaven, you
are watching us every day.
We know that your love is with us
And we promise... what you expected.

We miss you and
We love you.
Yours Loving heart

**Abijan**
**Abirami**
**Neha**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பேரன்புக்குரிய பெரியம்மாவிற்கு அஞ்சலி

எனது தாயாரின் மூத்த சகோதரி, பெரியம்மா என்று ஆசையுடன் கூப்பிடவில்லை. அன்பாக, பாசமாக பெரியம்மா என்றழைப்பது எமது வழமை காரணம் பெற்ற பிள்ளை பெறாபிள்ளை என்று வேறுபாடற்ற மனப்பாங்குடன் தன் பிள்ளை போன்று எம்மீது பாசம் கொண்ட ஒரு அம்மா தான் அவர்.

ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தவர்கள் நாங்கள் என் அறிவுக்கு எட்டிய காலம் தொடக்கம் மிக நேர்த்தியாக சேலை அணிந்து அழகாக கொண்டையிட்டு ஒரு பண்புள்ள அமைதியான ஆளுமை மிக்க தோற்றமுடையவர். எமது குடும்பத்தின் மூத்த சகோதரி என்பதற்கு எடுத்துக் காட்டாக அன்பு, உண்மை, சுயநலமின்மை போன்ற நல்ல பண்புகள் நிறைந்த மனம் கொண்டவர். இவற்றை தன் செயல்களிலும் வெளிப்படுத்தியவர்.

எதையும் எல்லோருக்கும் கொடுத்து உதவி செய்து, எந்த ஒரு விடயத்தையும் அதிகம் விவாதிக்காமல் ஏற்றுக் கொள்வது, இன்பம், துன்பம் எதையும் ஒரே மாதிரியாக ஏற்று தனது வாழ்வை சிறப்பாக வாழ்ந்து காட்டியவர்.

மிகவும் நீண்ட நாட்கள் அவருடன் அந்நியோன்னியமாக வாழ்ந்தோம். எனினும் நீண்ட நாட்களாக அவரைப் பார்க்கவில்லையே, நேரில் வந்து இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்ளவில்லையே என்பது தாங்க முடியாத வேதனை.

இன்னும் ஒரு பிறவி எடுத்தால் பெரியம்மா நீங்களே எங்கள் பெரியம்மாவாக வரவேண்டும் என்று இறைவனிடம் கேட்டு உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்

**பெறாமக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி அருந்தவமலர் நேசகுமாரன் அவர்களின் வம்சாவழி

அமரர் இரத்தினம்
+
அமரர் இரத்தினபூபதி

கமலாதேவி
சரோஜினிதேவி
அமரர் நேசகுமாரன்
பாலகுமாரன்
கலாதேவி
தேவகுமாரன்
சாந்தினி
மாலினி

அமரர் பரராஜசிங்கன்
+
அன்னலட்சுமி

ஸ்ரீஸ்கந்தராஜா
நவரத்தினராஜா
அமரர்
**அருந்தவமலர்**
பவளமலர்
அமரர் யோகராஜா
அமரர் மனோகரராஜா
சௌந்தரராஜா

லக்ஷாஜினி
+
சரேஷ்குமார்

அபிஜன்
அபிராமி
நேஹா

சஜிந்திரன்

ஜனனி
+
காசிரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாது அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாதி
அருள்வாயி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினதுபுகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின் கருணைநிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேளே
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் சிகரமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாகத் திகழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து இறைபதம் அடைந்த எங்கள் தெய்வம் அமரர் திருமதி அருந்தவமலர் நேசகுமாரன் அவர்களின் மறைவை அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் தொடர்பு கொண்டு எங்கள் துயரில் பங்கு கொண்ட உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், எங்களுடன் கூட இருந்து உதவி ஒத்தாசைகள் செய்தும் மலர் வளையங்கள் அனுப்பியும் அஞ்சலி இதழ்களை வெளியிட்டும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட யாவருக்கும் இம்மலரைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த JR அச்சகத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



**Designed & Printed @ JR Print**
**Tel: 020 8503 6643**